வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 21.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்றத்தின் மழைக் கால கூட்டத் தொடர் முடிந்து, இன்று இரு அவைகளும், காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டன.

நேற்று மக்களவையில் நிறைவேற்றப்பட்ட ஆன்-லைன் கேமிங் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு மசோதா, இன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான இண்டியா கூட்டணி வேட்பாளர் திரு சுதர்சன் ரெட்டி இன்று தமது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், தேசிய ஒற்றுமை குறித்த 2 நாள் தேசியக் கருத்தரங்கை, இன்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

நாடாளுமன்றம்

கடந்த மாதம் 21-ஆம் தேதி தொடங்கிய நாடாளுமன்றத்தின் மழைக் கால கூட்டத் தொடர் முடிந்து, இன்று இரு அவைகளும், காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டன. இம்முறை மக்களவையில் 14 அரசு மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு, 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் திரு ஓம் பிர்லா இன்று அவையில் தெரிவித்தார். எதிர்கட்சிகளின் அமளி காரணமாக அவையின் அலுவல் நேரம் இழக்கப்பட்டது குறித்து அவர் மகிழ்ச்சியின்மை வெளியிட்டார். கடைசி நாளான இன்றும் எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவையின்

அலுவல்கள் முதலில் 2 முறை ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவையிலும் இதேபோன்ற சூழ்நிலைக்கு இடையில் அலுவல்கள் முதலில் ஒரு முறையும், பின்னர் மறுதேதி குறிப்பிடப்படாமலும் ஒத்தி வைக்கப்பட்டன.

சுதர்சன் ரெட்டி

அடுத்த மாதம் 9-ஆம் தேதி நடைபெற உள்ள குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளான இன்று இண்டியா கூட்டணி வேட்பாளர் திரு சுதர்சன் ரெட்டி தமது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் திரு சோனியாகாந்தி, மற்றும், திமுகவைச் சேர்ந்த திரு திருச்சி சிவா உட்பட, கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் உடன் இருந்தனர். குடியரசு துணைத் தலைவர் பதவிக்கு, ஆளும் தேசிய கூட்டணி வேட்பாளர் திரு சி பி ராதாகிருஷ்ணன் ஏற்கனவே வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். இன்று வரை தாக்கலாகும் மனுக்கள் நாளை பரிசீலிக்கப்பட உள்ளன.

மோடி-பயணம்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பீகார் மற்றும் மேற்கு வங்கத்திற்கு பயணம் மேற்கொள்கிறார். பீகார் மாநிலம் கயாவில் மொத்தம் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலும் தொடர்ந்து மேற்கு வங்கத்தில் மொத்தம் 5 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலும், பல்வேறு திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். கயா-டெல்லி அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலையும், கல்கத்தா மெட்ரோ ரயில் திட்டத்தின் புதிய பிரிவுகளுக்கான மெட்ரோ ரயில் சேவைகளையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

கேமிங்

நேற்று மக்களவையில் நிறைவேற்றப்பட்ட ஆன்-லைன் கேமிங் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு மசோதா இன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது. இ-விளையாட்டுகள் மற்றும் ஆன்-லைன் சமூக விளையாட்டுகளை ஊக்குவிக்கும் அதேவேளை, பணம் வைத்து ஆடும் வகையிலான ஆன்-லைன் விளையாட்டுகள்,

தொடர்புடைய விளம்பரங்கள், மற்றும், பணப் பரிமாற்றங்களை தடை செய்வதற்கான விதிமுறைகள், இம்மசோதாவில் இடம் பெற்றுள்ளன. மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இன்று மாநிலங்களவையில் இம்மசோதாவை தாக்கல் செய்து பேசுகையில் ஆன்-லைன் பண விளையாட்டுகளால், ஆண்டுதோறும் 45 கோடி பேர் 20 ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை இழப்பதாக தெரிவித்தார்,

*கேமிங்-வாய்ஸ்*

ஆன்-லைன் விளையாட்டுகளால் நிதி நெருக்கடி ஏற்பட்டுப் பாழான, துரதிருஷ்டகரமான குடும்பங்களில், புதுச்சேரி கோர்க்காட்டைச் சேர்ந்த விஜயகுமாரின் குடும்பமும் ஒன்றாகும். வில்லியனூரில் மொபைல் போன் பழுதுபார்ப்பு நிலையம் ஒன்றை நடத்தி வந்த விஜயகுமார், ஆன்-லைன் விளையாட்டுகளால் பல லட்சம் ரூபாய் பணத்தை இழந்ததைத் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு முன்னர், தமது உயிரைத் தாமே மாய்த்துக் கொண்டார். தற்கொலை செய்து கொள்ளும் முன்னர், ஆன்-லைன் விளையாட்டுகளை தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து வாட்ஸ்-அப் பதிவு ஒன்றையும் அவர் வெளியிட்டு இருந்தார். தற்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆன்-லைன் கேமிங் ஒழுங்கு முறை சட்டத்தை, விஜயகுமாரின் மனைவி நல்லம்மாள் வரவேற்றுள்ளார். இன்று அவர் எமது செய்தியாளரிடம் பேசுகையில், எதிர்காலத்தில் எந்த ஒரு குடும்பமும் ஆன்-லைன் விளையாட்டுகளால் பாதிக்கப்படக் கூடாது என்றார். நல்லம்மாள் பேட்டியில் இருந்து ஒரு பகுதி ………………..

(வாய்ஸ்-நல்லம்மாள்)

*விண்வெளி*

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா நிறைவேற்றிய விண்வெளித் திட்டங்களின் எண்ணிக்கை, அதற்கு முந்தைய 10 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், சுமார் 2 மடங்காகும் என்று, இஸ்ரோ தலைவர் திரு வி நாராயணன் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம்

பேசுகையில் அவர் இதை தெரிவித்தார். மத்திய அறிவியல்- தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்று திரும்பி உள்ள இந்திய விண்வெளி வீரர் சுபான்சு சுக்லா, ககன்யான் திட்டத்துடன் தொடர்புடைய குரூப் கேப்டன் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர் ஆகியோரும், இந்த செய்தியாளர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*கைலாஷ்நாதன்*

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், இரும்பு மனிதர் கண்ணோட்டத்தில் தேசிய ஒற்றுமை என்னும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2 நாள் தேசியக் கருத்தரங்கை, இன்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். நாட்டை ஒன்று படுத்தி வைத்திருக்கும் மாண்புகளை மீண்டும் எண்ணிப் பார்க்கும் தருணமே, இக்கருத்தரங்கு என்று அவர் கூறினார். இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாறு, சர்தார் பட்டேல் இன்றி முழுமை பெறாது என்றும், இதைக் கருத்தில் கொண்டே பிரதமர் திரு நரேந்திர மோடி இரும்பு மனிதர் பட்டேலுக்கு மாபெரும் ஒற்றுமை சிலை அமைத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியா அனைவருக்குமானது-அனைவரும் இந்தியாவினர் என்பதே தேசிய ஒற்றுமையின் சாரம் என்றும், நாட்டை ஒருங்கிணைத்த சர்தார் பட்டேலுக்கு அனைவரும் தலை வணங்கி, ஒற்றுமையான, எவராலும் வெல்ல முடியாத இந்தியாவைப் படைக்க வேண்டும் என்றும் துணை நிலை ஆளுநர் கூறினார். புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் பிரகாஷ் பாபு, முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜென்ரல் திரு சங்கர நாராயணன் உள்ளிட்டோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-ஜீவா*

பொது உடமை தலைவர் ப ஜீவானந்தம் பிறந்த நாள் இன்று புதுச்சேரியில் அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. சாரம் அவ்வை திடலில் உள்ள ஜீவா சிலைக்கு, அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு ஜான்குமார், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற

உறுப்பினர் திரு கே எஸ்பி ரமேஷ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*புதுச்சேரி-படகு*

புதுச்சேரியில் கடலோர ரோந்துப் பணிகள் மற்றும் பேரிடர் கால மீட்பு பணிகளுக்காக, 16 லட்சம் ரூபாய் மதிப்பில் வாங்கப்பட்டுள்ள 3 புதிய ரப்பர் ரோந்து படகுகளை, இன்று முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திரு கலைவாணன், கடலோர காவல் நிலையத்தின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். கடலோர ரோந்துப் பணிகள் இதனால் எளிதாகும் என்று எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் தெரிவித்தார். திரு கலைவாணன் மேலும் கூறுகையில் ................

(வாய்ஸ்-கலைவாணன்)

*போட்டித் தேர்வு*

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறையில் அறுவை சிகிச்சை கூட உதவியாளர், மகப்பேற்று உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கான, எழுத்து தேர்வு, வரும் 23-ஆம் தேதி காலை-மாலை இருஅமர்வுகளாக நடைபெற உள்ளது. சுகாதார உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வில் முதல் தாள், வரும் 23-ஆம் தேதி காலையும், 2-ஆம் தாள் வரும் 24-ஆம் தேதி மதியமும் நடைபெறும். மருந்தாளுனர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு, வரும் 24-ஆம் தேதி காலை-மாலை இருஅமர்வுகளாக நடைபெற உள்ளது. இசிஜி தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வில் முதல் தாள், வரும் 24-ஆம் தேதி காலையிலும், 2-ஆம் தாள் வரும் 25-ஆம் தேதி காலையிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்வர்கள் தங்களுக்கான தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகளை, புதுச்சேரி அரசின் ஆள்சேர்ப்பு இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.

*ஏனாம்-வெள்ளம்*

கோதாவரி ஆற்றின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக புதுச்சேரியின் ஏனாம் பகுதியில். கோதாவரியின் கிளை நதியான கவுதமி ஆற்றில் நீர் வரத்து அதிகரித்து உள்ளது. கவுதமி ஆற்றில் வினாடிக்கு 10 லட்சம் கனஅடி நீர் கடலுக்கு திறந்து

விடப்படுவதால், தவ்லேஸ்வரம் அணைப் பகுதியில் வெள்ளம் அபாயம் குறித்து முதலாவது எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பாதிப்பு வாய்ப்பு அதிகம் உள்ள பகுதிகளில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக ஏனாம் மண்டல நிர்வாக அதிகாரி திரு ஆர் முனுசாமி எமது ஏனாம் நிருபரிடம் தெரிவித்தார்.

*வானிலை*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று வட தமிழகத்தில் ஒருசில இடங்கள், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 27-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்றத்தின் மழைக் கால கூட்டத் தொடர் முடிந்து, இன்று இரு அவைகளும், காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டன.

நேற்று மக்களவையில் நிறைவேற்றப்பட்ட ஆன்-லைன் கேமிங் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு மசோதா, இன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான இண்டியா கூட்டணி வேட்பாளர் திரு சுதர்சன் ரெட்டி இன்று தமது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், தேசிய ஒற்றுமை குறித்த 2 நாள் தேசியக் கருத்தரங்கை, இன்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------------